# தர்மபிரபாஷ்வர விருதுகள் 2026

அபிமானமிக்க பயணத்தின் கிறிஸ்தவ மனிதனைத் தேடி

கிறிஸ்த்தவ மத அலுவல்கள் திணைக்களத்துடன் தேசிய கத்தோலிக்க மக்கள் தொடர்பு மையம் இணைந்து ஏற்பாடு செய்யும் அபிமானமிக்க விருது வழங்கும் வைபவம் இந்த ஆண்டு 6வது முறையாகவும் கோலாகலமாக ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பல்வேறு வகையான துறைகளில் மறை மாவட்ட மட்டத்தில் கௌரவிக்கப்பட வேண்டிய கத்தோலிக்க கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து தேசிய மட்டத்தில் கௌரவிப்பதே இந்த விழாவின் நோக்கம்.

<u>விருதுபெறுபவர்களைத் தெரிவுசெய்யும் நடைமுறைகள்</u>

- 2026ம் ஆண்டுக்கும் எதிர்வரும் ஆண்டுகளுக்குமான விருது பெறுவோரைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தனிப்பட்ட ரீதியில் கோரப்படும்.
- விண்ணப்பதாரிகள் உரோமன் கத்தோலிக்கர்களாக இருப்பது கட்டாயமாகும்.
- இந்த விருது ஒரு கலைஞருக்கு வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் வாழ்நாள் விருதாகும்.
- விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் முன்பு இந்த விருதைப் பெற்றிருக்கக் கூடாது.
- விண்ணப்பங்கள் பங்குத்தந்தை அல்லது மறைமாவட்ட திருவழிபாட்டு பணிப்பாளர் அருட்தந்தையின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரியோ அல்லது வேறொருவரோ விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.
- குறைந்தது 15 வருட அனுபவம் அந்தத் துறையில் இருக்க வேண்டும்.
- விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம்.
- நடுவர் குழு சரியான தீர்மானங்களை எழுப்பதை இலகுபடுத்துவதற்காக விண்ணப்பத்துடன் தமது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய படைப்புக்கள், சான்றிதழ்கள், ஆவணங்கள் அல்லது பிற டிஜிட்டல் அல்லது அச்சிடப்பட்ட ஊடகங்களின் தகவல்களை திணைக்களத்திற்கு வழங்குதல் வேண்டும். விருது வழங்கும் வைபவம் இடம்பெற்று ஒரு மாதத்திற்குப் பின்னர் உரிய ஆவணங்களை, படைப்புக்களை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.
- விண்ணப்பதாரர்களிடையே விருதுபெறுபவர்களைத் தெரிவுசெய்யும் செயற்பாடானது திணைக்களத்தினால் நியமிக்கப்படும் நடுவர் குழுவினால் மேற்கொள்ளப்படும்.
- நடுவர்கள் குழுவின் தீர்மானம் இறுதியானது.

**தர்மபிரபாஷ்வர விருது வழங்கும் விழாவிற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்போர் கீழே காட்டப்பட்டுள்ள பிரிவுகளின் கீழ் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

- ஆக்கபூர்வமான எழுதும் கலை
- ஆக்கபூர்வமான இசைத் துறை
- ஆக்கபூர்வமான சினிமா துறை
- ஆக்கபூர்வமான சித்திரக் கலை
- ஆக்கபூர்வமான சிற்பம் மற்றும் செதுக்கல் கலை
- ஆக்கபூர்வமான நாடகக் கலை
- ஊடகத் துறையில் நிபுணத்துவம்
- ஆக்கபூர்வமான புகைப்படக் கலை
- கலைத்துவமான உட்புற வடிவமைப்பு
- ஆக்கபூர்வமான வரைகலை வடிவமைப்பு
- ஆக்கபூர்வமான வரைகலை ஆக்கங்கள் மற்றும் கைவினைகள்
- ஆக்கபூர்வமான அணிகலன் மற்றும் ஆடையணிகள் ஆக்கம்
- ஆக்கபூர்வமான தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்புகள்
- ஆக்கபூர்வமான வலைத்தள மற்றும் சமூக ஊடகப் படைப்புகள்

விண்ணப்பதாரரின் 4x6 அளவில் தயாரிக்கப்பட்ட தெளிவான புகைப்படம் அதன் பின்புறத்தில் பெயர் குறிப்பிடப்பட்டு இப் படிவத்துடன் எமக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

விண்ணப்பங்கள் 2026.10.10ம் திகதியன்றோ அதற்கு முன்னரோ திணைக்களத்துக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக வந்து ஒப்படைக்கப்பட வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

பணிப்பாளர்,<br>
கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்,<br>
3ம் மாடி,<br>
இல. 180,<br>
ரீ.பீ. ஜயா மாவத்தை,<br>
கொழும்பு 10.

**மேலதிக விபரங்களுக்கு 0112665584 (திருமதி.ஹசினி)**